மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

O.S.No. 58/2023

வாக்குமூலம்: வா.சா.ஆ.1 – மஞ்சுளா

28.08.2025:

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. என்னுடைய சொத்து சர்வே எண்.65/4 ல் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்துக்கு மேற்குப் பக்கம் சர்வே எண்.65/3 ல் காலியிடம் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய சொத்துக்கு மேற்குப் பக்கம் உள்ள நகராட்சி பாதை சர்வே எண்.67 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.65/3 ஆனது எனக்கு சொந்தமான இடம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்துக்கு கிழக்குப் பக்கம் தென்வடல் நகராட்சி ரோடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்து தற்போது காலியிடமாக உள்ளது. என்னுடைய சொத்தை நான் வாங்கி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் சுமார் 5 வருடம் ஆகிறது. நான் என்னுடைய சொத்தை வாங்கும் போது காலியிடத்துடன் ஒரு வீடு இருந்தது.

2. மேற்படி வீட்டிற்கு கிழக்கு பார்த்த வாசல் உள்ளது என்றால் சரிதான். என் முன்பாத்தியஸ்தர் பெயர் நல்லம்மாள் என்றால் சரிதான். நல்லம்மாள் அவர்கள் Approval ஆன Layout plan படி தான் மேற்படி இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி Layout plan ன் படி 5 ஆம் நம்பர் பிளாட்டை கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். நல்லம்மாளுக்கு பாத்தியப்பட்ட மேற்படி 5 ஆம் நம்பர் பிளாட்டை தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நல்லம்மாள் கிரையம் பெற்று அனுபவித்து வந்த சொத்தினைத்தான் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். நல்லம்மாள் கிரையம் பெற்ற பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி பத்திரத்தில் உள்ள சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நல்லம்மாள் கிரையம் பெற்ற பத்திரத்தில் சொத்து விபரத்தில் மேற்குப் பக்கம் பிளாட் எண்.4 சுபாஷ் போஸ் பாக இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிணற்றுக்கு தென்புறம் உள்ள இடத்தைத்தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிணறு பொதுக் கிணறு தான் என்றால் எனக்கு தெரியாது.

நான் கிரையம் வாங்கும் போது மேற்படி கிணறு அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். அந்தக் கிணறு இருந்த இடத்தில் தற்போது வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிணறு இருந்த இடம் யார் பெயரில் இருந்தது என்றால் நாச்சிமுத்து அவர்கள் பெயரில் உள்ளது. நாச்சிமுத்து அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4.நான் கிரையம் வாங்கும் போது Approval ஆன Layout plan படி தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி பிளானை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் வீடு கட்ட விடாமல் தடுத்தார்கள். மேற்குப் பக்கம் உள்ள ரோட்டிற்கு போகவிடாமல் தற்காலிக (ரெடிமேட்) சுவர் வைத்துள்ளார்கள். பிராது 1 லக்க சொத்தானது 10 சதுரடி என்றால் சரிதான். 10 சதுரடியில் மட்டும் தான் கட்டிடம் கட்டக்கூடாது என்று தடுத்தார்களா என்றால் இல்லை, என் மொத்த சொத்திலும் கட்டிடம் கட்ட விடாமல் தடுத்தார்கள். மேற்படி மொத்த சொத்தும் எனக்கு பாத்தியம்பட்டது என்று நீதிமன்றத்தில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

5.மேற்டி தற்காலிக காம்பவுண்ட் சுவரை அகற்ற வேண்டும் என்று சட்டப்படி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சுவர் எனக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் இருந்ததாக கருதி இடித்துவிட்டோம் என்றால் இல்லை, செடி, கொடிகளை அகற்றும் சமயம் மேற்படி சுவர் இடிந்து விட்டது. மேற்படி செடி, கொடிகளை JCB இயந்திரம் மூலம் அகற்றினோமா என்றால் அகற்றினோம். அங்கு முட்புதர்களாக இருந்ததால் JCB மூலம் அகற்றினோம். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னர் JCB இயந்திரம் மூலம் இடத்தை சுத்தம் செய்தேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே சுத்தம் செய்தோம். மாதம் குறிப்பாக ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கறிஞரிடம் மேற்படி சுவர் இடிந்து விட்டது என்ற விபரத்தை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை, சுவர் சாய்ந்து விட்டது என்ற விபரத்தை சொன்னேன்.

6.பிராது 1 லக்க சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து சுவர் கட்டவில்லை என்றால் இல்லை. பிராது 2 லக்க சொத்து பழனி

முனிசிபாலிட்டிக்கு சொந்தமான ரோடு என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட இடம் தற்போது காலியிடமாக உள்ளது என்றால் சரிதான்.

7.என்னுடைய சொத்திற்கு கிழக்குப் பக்கம் உள்ள தென்வடல் ரோடு வழியாக சென்ற வர மட்டுமே வசதியும் உரிமையும் உள்ளது என்றால் இல்லை, எனக்கு கிழக்குப் பக்கமும், மேற்குப் பக்கமும் பாதை உள்ளது. கிழக்குப் பக்கம் உள்ள ரோடு நகராட்சிக்கு சொந்தமான பொதுப் பாதை என்றால் சரிதான். மேற்படி ரோடு அங்கிருக்கும் மக்களுக்கு மெயின் ரோடு என்றால் இல்லை, குறுக்கு ரோடு சுமார் 20 அடி அகலம் இருக்கும். தாவா 2 லக்க சொத்தில் எனக்கும், எனது முன்பாத்தியஸ்தர்களுக்கும் போய் வர எவ்வித பாதையும் இல்லை என்றால் சரியல்ல, பாதை உள்ளது. தாவா 2 லக்க சொத்தைப் பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

8.தாவா 2 லக்க சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா 1 லக்க சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் முன்பாத்தியஸ்தர்கள் காலத்தில் இருந்து சட்ட காலத்திற்கு மேலாக சுவர் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் சொத்து வாங்கும் பொழுது ஓலை தடுப்பு வைத்து தான் தடுத்திருந்தார்கள். என் இடம் முள் புதர் காடாக இருந்ததால் பாதுகாப்பிற்காக நீண்டகாலமாக சுவர் வைத்து தடுத்திருந்தார்கள் என்றாலும், ஓலை தடுப்பு வைத்திருந்ததாக நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டு மறுபுறம் மேற்படி தாவா சுவரை JCB இயந்திரம் மூலம் இடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது முன்பாத்தியஸ்தர் நல்லம்மாள் கிரையம் பெற்ற சொத்து விபரத்திற்கும், நான் அவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து விபரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த தாவா மாதிரி வரைபடம் வழக்கிற்க்காக தவறாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான மாதிரி வரைபடத்தை வைத்து தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

10.தாவா 2 லக்க சொத்து பிரதிவாதிகள் மற்றும் தாவா 2 லக்க சொத்தில் குடியிருப்பவர்கள் பயன்பாட்டிலும், அனுபவத்திலும் தான்

உள்ளது என்றால் தற்சமயம் அவர்கள் அனுபவத்தில் தான் உள்ளது. நான் கிரையம் வாங்கிய பிறகு பிரதிவாதிகளுடன் பிரச்சனை செய்ய வேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.